அ.வ எண் 161/2020 கணேசன் என்ற கனகராஜ்(பிசா1) தேதி:05.02.2024

வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் எனது தாத்தா, பாட்டி வீட்டில் தான். மலைப்பட்டி என்பது எனது பெற்றோரின் ஊர் ஆகும். தாவா சொத்துக்கள் இரண்டு சர்வே எண்களில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். 1 தாவா சொத்து 39 செண்டும், மற்றொரு தாவா சொத்து 12 ஏக்கர் 20 செண்டும் உள்ளது என்றும், மொத்தம் 12 ஏக்கர் 59 செண்ட் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து எனது அம்மாவை பெற்ற தகப்பனாரான சீனிவாச நாயக்கர் என்பவருக்கு 1962ம் வருடத்திய கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமான கிரைய ஆவணம் மற்றும் செட்டில்மண்ட் ஆவணம் ஆகியவற்றை படித்துப்பார்த்துள்ளேன். தாவா சொத்தில் ஆவணங்களின் அடிப்படையில் 1 கிணறு மட்டுமே உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிணறானது தாவா சொத்தின் மையப்பகுதியில் இருக்கிறது என்று சொன்னால் மையப்பகுதிக்கு சற்று தெற்கு பக்கம் அமைந்துள்ளது. ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் வேறு ஒரு கிணறு இருந்ததாகவோ அது தூர்ந்து போனதாகவோ ஆவணங்கள் இருக்கிறதா என்றால் வாதிக்கு எனது தாத்தா எழுதிவைத்த செட்டில்மண்ட் ஆவணத்தில் சர்வே எண்.257/1ல் ஒரு கிணறு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.257/1ல் உள்ள கிணறு தூர்ந்துபோனதாக ஆவணங்கள் எவையும் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்துப்பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடும் பொழுது சர்வேயரிடம் சர்வே எண்.257/1ல் கிணறு இருந்த இடத்தை அடையாளம் காண்பித்தோம். ஆனால் அதை அவர்கள் குறித்துக்கொண்டாகளா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு நாங்கள் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் தாவா சொத்தில் மற்றொரு கிணறு இருந்ததாகவோ அது தூர்ந்து போனதாகவோ நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லவில்லை என்றும், அவ்வாறு ஒரு கிணறு கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணறு சர்வே எண்.257/3ல் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி

சர்வே எண்.257/3 சொத்தின் மொத்த விஸ்தீரணம் 12 ஏக்கர் 20 செண்ட் என்று சொன்னால் சரிதான். நான் சர்வே எண்.257/1ல் ஒரு கிணறு இருந்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சர்வே எண்.257/1ல் ஒரு கிணறு இருந்ததாகவும், மேற்படி கிணறு தூர்ந்து போனதாகவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிக்கு எழுதிக்கொடுத்த வாசாஆ.1 பதிவு செட்டில்மண்ட் ஆவணத்தின் படி சர்வே எண்.257/1ல் 39 செண்ட் மற்றும் சர்வே எண்.257/3ல் ஏக்கர் 12 செண்ட் 20ல் ஆக மொத்தம் 12 ஏக்கர் 59 செண்டில் பிரிவின்றி ஏக்கர் 6 செண்ட் 30 சொத்து கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தில் இருக்கும் கிணற்றின் சர்வே எண் தவறுதலாக சொல்லப்பட்டதை ஆதரவாக எடுத்துக்கொண்டு தாவா சொத்தில் மற்றொரு கிணறு இருந்ததாகவும் அது தூர்ந்துபோனதாகவும் பொய்யாக வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. புஞ்சை நிலங்களில் கிணறு இருக்கும்பட்சத்தில் வருவாய் துறை ஆவணங்களில் அதன் அமைப்பு துலங்கும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் மற்றொரு கிணறு இருந்ததாக வருவாய் ஆவணங்கள் எவையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா 12 ஏக்கர் 59 செண்டில் மையப்பகுதியில் ஒரே ஒரு கிணறு மட்டுமே இருக்கிறது என்றும், மற்றொரு கிணறு கிடையாது என்றும், அது தூர்ந்து போனதாக சொல்லக்கூடிய சங்கதியும் உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல.வாதிக்கு எனது தாத்தா எழுதிக்கொடுத்த வாசாஆ.1 ஆவணத்தின் படி தாவா சொத்தில் இருக்கக்கூடிய ஒரே ஒரு கிணற்றில் பிரிவின்றி பேர்பாதி பங்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் என்னால் சர்வே எண்.257/1ல் உள்ள கிணற்றில் தான் பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. எனக்கு 2014ம் வருடம் நாடாளுமன்ற தேர்தல் சமயம் ஒரு விபத்து ஏற்பட்டது. தாவா சொத்தில் உள்ள கிணற்றிலிருந்து நான் தவறி கீழே விழுந்துவிட்டேன். தாவா சொத்தில் உள்ள கிணற்றை எனது தாத்தா கிரைய ஆவணத்தில் உள்ளடக்கி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் எனது தாத்தா கிரையம் வாங்கும் பொழுது சர்வே எண்.257/3ல் கிணறு கிடையாது. அதற்கு பிறகு பூர்வீகமாக நாங்கள் சர்வே எண்.257/3ல் கிணறு வெட்டினோம். நான் பிறக்கும் பொழுது மேற்படி சர்வே எண்.257/3ல் கிணறு இருந்ததா என்றால் அப்பொழுது சிறிய கிணறு இருந்தது. பிறகு தண்ணீர் இல்லாமல் இருந்ததால் நாங்கள் ஆழபடுத்தினோம்.

எனக்கு தற்பொழுது 39 வயது ஆகிறது. மேற்படி தாவா சொத்தில் நான் இருந்ததாக சொன்ன சிறிய கிணறு எனது தாத்தா கிரையம் வாங்கும் பொழுதே இருந்ததா என்றால் 1985ம் வருடம் மேற்படி கிணறு தோண்டப்பட்டது. 1985ம் வருடம் மேற்படி தாவா சொத்தில் எனது தாத்தா வாதி மற்றும் அவரது இரண்டு தம்பிகள் ஆகியோர் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் வாதி கூட்டாக அனுபவிக்கவில்லை. ஆனால் எனது தாத்தா மற்றும் வாதியின் 2 தம்பிகள் சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தார்கள். வாதியின் மீது உள்ள காழ்புணர்ச்சி காரணமாக மேலே சொன்னவாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது தாத்தா, வாதி ஆகியோர் கூட்டு சேர்ந்து கிணற்றை ஆழப்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதியானவர் ஆரம்ப காலகட்டத்திலிருந்து அவரது தகப்பனாரோடு கூட்டு சேர்ந்து விவசாயம் செய்து அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் இருக்கக்கூடிய ஒரே ஒரு கிணற்றில் வாசாஆ.1 ஆவணத்தின் மூலம் வாதிக்கு பேர்பாதி உரிமை இருக்கின்றது என்று சொன்னால் சரியல்ல. வாசாஆ.1 ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட பின்பு எனது தாத்தா எனது மாமா கணபதி என்பவருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மண்ட் ஆவணத்திலோ அல்லது எனது தாத்தா மற்றொரு மாமா சீனிவாசம் 6ம் பிரதிவாதி என்பவருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மண்ட் ஆவணத்திலோ வாய்மொழி பாகம் நடைபெற்றதாக எந்தவிதமான சங்கதியும் இல்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எனது தாத்தா மேற்படி கணபதி என்பவருக்கு எழுதிக்கொடுத்த வாசாஆ.2 ஆவணத்தில் எனது கையிருப்பு புஞ்சை நிலத்திற்கும் வடக்கும், தெற்கும் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும் எனது தாத்தா எழுதிக்கொடுத்த வாசாஆ.3 ஆவணத்தில் நான்கு மால்களில் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட இடம் என்று எதுவும் காட்டப்படவில்லை என்று சொன்னால் மேற்படி ஆவணத்தில் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒரு மால் ஆக வராது. நான் சொல்வது போல் 1995ம் வருடம் பிப்ரவரி மாதத்திலோ அதற்கு முன்போ அல்லது பின்போ எந்த காலத்திலும் வழக்கு சொத்துக்களைப்பொறுத்து சீனிவாச நாயக்கரால் வாய்மொழியாக எந்தவித சொத்தும் பிரித்து கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சீனிவாச நாயக்கரால் எழுதிக்கொடுக்கப்பட்ட எந்த ஆவணத்திலும் வழக்கு சொத்தில் உள்ள வீடு குறித்து குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எனவே, மொத்த சொத்தில் பிரிவின்றி பேர்பாதி என்று எழுதும் பொழுது மேற்படி தாவா

சொத்தில் உள்ள வீட்டிலும் பிரிவின்றி பேர்பாதி வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் இருக்கக்கூடிய கதவு எண்.5/128 உள்ள வீடு 2000 வருடம் எனது தாத்தா இருக்கும் பொழுது நாங்கள் கட்டிய வீடு ஆகும். தாவா சொத்தில் கதவு எண்.5/128 ல் உள்ள வீடு சுமார் 30 வருடங்களுக்கு முன்பு எனது தாத்தாவும், வாதியும் சேர்ந்து கட்டிய வீடு என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு அருகே மற்றொரு வீடு நான் கட்டியதாக சொல்வது வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்பு கட்டப்பட்டதா என்றால் முன்னரே கட்டப்பட்டது. அதனால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு 3 மாதத்திற்கு முன்பு வழக்கு சொத்தில் தனக்குரிய பங்கை பிரித்துக்கொடுக்கவும் சர்வேயர் மூலமாக அளக்கவும் வாதி ஏற்பாடு செய்த பொழுது பிரச்சனை ஏற்பட்டது என்றால், வீடு கட்டியதற்கு பிறகு தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது. தாவாவிற்கு பின்னர் வீடு கட்டப்பட்டது என்றும், எனவே மேற்படி வீட்டில் எங்களால் தனித்த உரிமை கொண்டாட முடியாது என்று சொன்னால் சரியல்ல. கிராமங்களில் சொத்தை சகோதரர்களுக்கிடையே பிரிப்பதில் கிழமேலாக மற்றும் தென்வடலாக பிரிப்பது என்ற நடைமுறை இருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரிந்து அவ்வாறான நடைமுறை இல்லை. அவ்வாறான நடைமுறை இருப்பது எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக எனக்கு தெரியாது என்றும் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தா உயிரோடு இருந்த காலத்திலும், அவர் இறந்த பிறகும் வழக்கிற்கு முன்பு வரை வாதி தனது விவசாய செலவிற்கான பங்கினை எனது தாத்தாவிடம் அவருக்கு பிறகு என்னிடமும் கொடுத்து அதற்குரிய பலன்களையும் பெற்று வந்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனது தாத்தா உயிரோடு இருந்த காலத்திலோ அல்லது அதற்கு பின்போ, வழக்கு தாக்கல் செய்யப்படும் வரையோ எந்தவிதமான பாகப்பிரிவினையும் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மற்ற 2 மாமாக்களை என்வசம் எடுத்துக்கொண்டு தாத்தாவை ஏமாற்றி ஆவணங்களை ஏற்படுத்தி வாதியின் தாவா சொத்தில் உள்ள பிரிவின்றி பேர்பாதி பங்கை அபகரிக்க முயற்சிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணற்றிலும், பழைய வீட்டிலும், நான் தற்பொழுது அனுமதியின்றி கட்டிய புதிய வீட்டிலும் அனைத்து தாவாசொத்துக்களிலும் வாதிக்கு பிரிவின்றி பேர்பாதி பங்கு கிடைகக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு பகுதி தரிசாக

உள்ளது என்பது வாதியிடமிருந்து விவசாய செலவிற்கான அவரது ஒரு பங்கினை பெற்றுக்கொண்டு தாவா சொத்தின் ஒரு பகுதியை வேண்டும் என்றே தரிசாக விட்டுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணற்றிற்கு இன்றுவரை எனது தாத்தா மற்றும் வாதி பெயரில் தான் வாசாஆ.10 பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ.11 பட்டாவின்படி சர்வே எண்.257/3A ன் படி 4.85.50 ஹெக்டேர் புஞ்சை நிலத்தை பொறுத்து 6 ம் பிரதிவாதி பெயரிலும் எனது தாயார் சீத்தாலட்சுமி பெயரிலும், என் பெயரிலும், எனது தாத்தா சீனிவாச நாயக்கர் பெயரிலும், வாதி பெயரிலும் கூட்டாக பட்டா எண்.1546 வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனவே, தாவா சொத்துக்கள் இன்றுவரை கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றும் எந்தவிதமான பிரிவும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவாசொத்தில் வாதிக்கு பிரிவின்றி பேர்பாதி பங்கு கிடைகக்கூடியது என்றும், அதை அபகரிக்கும் எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணறு குறித்து தவறான சர்வே எண் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதை சாதகமாக எடுத்துக்கொண்டு வாதியின் உரிமையை என்னால் மறுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.